## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம்பிரிவு 22-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் எழுதிவரும்தமது சரிதை பின்வருமாறு:—

தொழிலுக்காக கோட்டையில் ஒரு அறையையும், குடியிருப்புக்காக கிர்காம்வில் ஒரு வீட்டையும் நான் வாடகைக்கு அமர்த்திக்கொண்ட போதிலும், நான் கவலையற்றிருக்க ஆண்டவன் விட்டுவைத்திருக்கவில்லை. புதிய வீட்டில் குடித்தனம் புகுந்த சில தினங்களுக்குள்ளேயே ஏற்கெனவே ஒரு முறை வைசூரியினால் கடுமையாகப்பீடிக்கப்பட்டிருந்தனது இரண்டாவது குமாரன் மணிலாலுக்கு ஸன்னிபாத ஜுரமும் கபவாத ஜுரமும் சேர்ந்து வந்ததுடன் இரவில் மயக்கமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

வைத்தியருக்குச் சொல்லி அனுப்பினேன். அவர் வந்து பார்த்து ஔஷதத்தினால் பிரயோஜனமில்லை யென்றும், கோழி முட்டையையும் கோழிக்குஞ்சு சூப்பும் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்.

மணிலாலுக்கு அப்பொழுது 10 வயது. அவனுடைய சம்மதத்தைக் கேட்டுச் செய்வதென்பது சாத்தியமில்லாததாக இருந்தது. நான் கார்டியனாதலால் இன்னது செய்வதென்பதை நானே முடிவு செய்ய வேண்டியிருந்தது. வைத்தியர் நல்லவர். பார்ஸிக்காரர். நாங்கள் சாகபக்ஷிணிகளென்றும், குழந்தைக்கு இரண்டிலொன்றையும் கொடுப்பது எங்களுடைய கொள்கைக்கு விரோதமென்றும் சொல்லி வேறு எதையேனும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

"உங்களுடைய குமாரனுடைய உயிருக்கு ஆபத்து வந்திருக்கிறது. பாலை ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். ஆனால் அது நல்ல ஊட்டத்தைக் கொடுக்காது. பல ஹிந்து குடும்பங்களுக்கு நான் வைத்தியம் செய்து வருவது உங்களுக்குத் தெரியும். நான் கொடுக்கச் சொல்லுவதை அவர்கள் ஆக்ஷேபமின்றியில் கொடுத்துவருகிறார்கள், நீங்களும் அவ்விதமே செய்வது நலம். குழந்தையை கஷ்டப்படுத்தாதீர்கள்" என்று சொன்னார்.

"நீங்கள் சொல்லுவது சரிதான். வைத்தியராகிய நீங்கள் வேறென்ன செய்யமுடியும்? பையனுக்கு வயசாகி இருந்தால், அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படி நடப்பேன். இப்பொழுது நானே அவனுக்காக முடிவு செய்ய வேண்டிய நிலைமையிலிருக்கிறேன். இத்தகைய சந்தர்ப்பங்களிற்றான் ஆண்டவன் ஒருவருடைய தர்மத்தைச் சோதிக்கிறார். மனிதர்கள் மாமிசம், கோழி முட்டை முதலியவைகளைச் சாப்பிடக்கூடாதென்று சரியாகவோ, தப்பாகவோ நான் முடிவு செய்து கொண்டிருக்கிறேன். நம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு நாம் அனுஷ்டிக்கும் உபாயங்களுக்கும் ஒரு எல்லையுண்டு. இது போன்ற சந்தர்ப்பங்களிலும் நானாவது, என்னுடைய குடும்பத்தாராவது, மாமிசத்தையாவது, கோழி முட்டையையாவது உபயோகிப்பதென்பதை என்னுடைய மதம் அனுமதிக்கவில்லை. ஆகையால் குறிப்பிடும் அபாயம் ஏற்படுவதாக இருந்தாலும் நான் அதற்கு உட்பட வேண்டியதுதான். ஆனால் ஒரு காரியம் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் சொல்லுகிற வழியை நான் பின்பற்ற முடியவில்லை. எனக்குச் சில ஜல சிகிச்சை முறைகள் தெரியும். ஆனால் குழந்தையினுடைய நாடியையாவது, நிருதயத்தையாவது, சுவாசா சயங்களையாவது சோதித்துப்பார்க்க எனக்குத் தெரியாது. ஆகையால் அடிக்கடி நீங்கள் பையனை வந்து சோதித்துப் பார்த்து, இவைகள் இருந்துவரும் நிலைமையை எனக்குச் சொல்லிவந்தால் நான் மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன்" என்று சொன்னேன்:

எனக்கிருந்த சங்கடத்தை வைத்தியர் உணர்ந்து, அடிக்கடி குழந்தையை வந்து பார்த்துவிட்டுப் போக ஒப்புக் கொண்டார். எதைச் செய்வதென்று நிர்மாணித்துக்கொள்ளக் கூடிய நிலைமையில் என்னுடைய குமாரன் இருந்து வராதபோதிலும், வைத்தியருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையின் விவரத்தை அவனிடம் சொல்லி அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"உங்களுடைய ஜல சிகிச்சை முறையைக் கையாண்டு வாருங்கள். கோழி முட்டையையாவது, கோழிக் குஞ்சு சூப்பையாவது சாப்பிடமாட்டேன்" என்று அவன் சொல்லிவிட்டான்.

இரண்டில் எதைக் கொடுத்திருந்தாலும் அவன் சாப்பிட்டிருப்பானென்பது எனக்குத் தெரிந்திருந்த போதிலும் இவ்விதம் அவன் பதில் சொல்லியதில் நான் திருப்தியடைந்தேன்.

குனியின் சிகிச்சை வழி எனக்குத் தெரியும். நான் அதை அனுஷ்டித்துப் பார்த்துமிருக்கிறேன். உபவாசத்தினால் அநுகூல மேற்படுமென்பதும் எனக்குத் தெரியும். ஆகையால் குனியின் முறைப்படி மணிலாலுக்கு குதிவரையில் ஜல ஸ்நானம் செய்து வைத்து வந்தேன். மூன்று நிமிஷங்களுக்கு அதிகமாக அவனை ஜலத்தில் வைத்திருப்பதில்லை. வயிற்றுக்கு ஆரஞ்சுப் பழரஸத்தை ஜலத்தில் கலந்து கொடுத்து வந்தேன்.

சரீரத்தின் உஷ்ணம் குறையாமல் 104 டிகிரியாக ஏறிவிட்டது. இராக்காலங்களில் அவனுக்கு மயக்கம் வந்து கொண்டிருந்தது. எனக்குக் கவலை ஏற்பட ஆரம்பித்துவிட்டது. ஜனங்கள் என்னை என்ன சொல்லுவார்கள்? என்னுடைய தமையன் என்னைப்பற்றி என்ன நினைப்பார்? வேறு வைத்தியரையாவது கூப்பிட்டுக் காட்டக் கூடாதா? ஏன் ஒரு ஆயுர்வேத வைத்தியரைக் கூப்பிட்டுக் காட்டக் கூடாது? வைத்தியக்கார முறைகளைப் பெற்றோர்கள் குழந்தைகள் விஷயத்தில் எவ்விதம் பரீக்ஷை பார்க்கலாம்?

இத்தகைய எண்ணங்களே என் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தன. இவ்விதம் எண்ணிக் கொண்டிருக்கையில் வேறு சில எண்ணங்கள் தோன்றும். எனக்கு வியாதி வந்தால் எவ்விதச் சிகிச்சை செய்து கொள்ளுவேனோ அதையே என்னுடைய குழந்தைக்கும் செய்வது ஆண்டவனுக்குத் திருப்தியாக இருக்குமென்று ஒரு எண்ணம் ஏற்படும். ஜல சிகிச்சையில் எனக்கு நம்பிக்கையிருந்தது; மேனாட்டு வைத்திய முறையில் எனக்கு அதிக நம்பிக்கையில்லை. வைத்தியர்கள் குழந்தை பிழைத்து விடுவானென்று நம்பிக்கையாகச் சொல்ல முடியாது. அவர்கள் பரீக்ஷைதான் செய்து பார்க்கலாம். ஆயுள்காலம் ஆண்டவன் கையிலிருக்கிறது. ஏன் அவர்மீது பாரத்தைப் போட்டு எனக்கு யுக்தமாகத் தோன்றிய முறையை அனுஷ்டிக்கக் கூடாது என்று நினைப்பேன்.

இவ்விதம் ஒன்றுக்கொன்று முரண்பாடான அபிப்பிராயங்களால் என் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. நான் குழந்தையின் படுக்கையில் அவனுக்குப் பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்தேன். ஈரத் துணியை அவன் மீது போடுவதென்று நான் முடிவு செய்தேன். ஒரு துணியை எடுத்து ஜலத்தில் நனைத்து, நன்றாகப் பிழிந்து, தலை தவிர மற்ற இடங்களின் மீது போட்டு, இரண்டு கம்பளிகளை மேலே போர்த்திவிட்டேன். தலையிலும் ஒரு ஈரத்துணியைப் போட்டேன். சரீரமுழுவதும் பழுக்கக் காய்ச்சிய இரும்பு போல் கொதித்துக் கொண்டிருந்தது. வியர்வையே இல்லை.

எனக்குக் களைப்பு ஏற்பட்டுவிட்டது. குழந்தையிடம் என்னுடைய மனைவியை உட்கார்த்தி வைத்து விட்டு, சிறிது ஆகவாஸம் செய்து கொள்வதற்காக சௌபாத்தி மணலுக்குச் சென்றேன். அப்பொழுது மணி 10 இருக்கும். சில பாதசாரிகள்தான் அங்கிருந்தனர். அவர்களைக்கூட நான் ஏறெடுத்துப் பாக்காமல் ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்திருந்தேன். "இந்த சோதனை காலத்தில் என் பெயரைக் காப்பாற்ற வேண்டியது ஆண்டவன் பொறுப்பு" என்று சொல்லிக்கொண்டு, ராமநாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கீழே படுத்துப் புரண்டு விட்டு வீட்டுக்குத் திரும்பினேன். என்னுடைய இருதயம் பட படவென்று அடித்துக்கொண்டிருந்தது.

நான் உள்ளே சென்றதும் என்னுடைய குமாரன் "அப்பா வந்துவிட்டீர்களா" என்றான்.

"வந்துவிட்டேன் அப்பா" என்று சொன்னேன்.

"போர்வையை எடுத்துவிடுங்கள்; உடம்பு எரிகிறது" என்றான்.

அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன். வியர்வை வெளிப்பட்டிருந்தது. சரீரத்தின் உஷ்ணமும் குறைந்துவந்தது. ஆண்டவனுக்கு வந்தனம் செலுத்தினேன்.

"மணிலால், உன்னுடைய ஜுரம் இறங்கிவிடும். இன்னும் சிறிது வியர்த்தால் பிறகு போர்வையை எடுத்து விடுகிறேன்" என்று சொன்னேன்.

"போதும், போதும். என்னை வெளிப்படுத்திவிடுங்கள். என்னால் தாங்கமுடியவில்லை. வேண்டுமானால் இன்னொரு தடவை பிறகு போர்த்து விடலாம்" என்று சொன்னான். நான் வேறு பேச்சுக் கொடுத்து சிறிது நேரம் அவன் புத்தியை வேறு வழியில் திருப்பி வைத்திருந்தேன். நெற்றியில் வியர்வை கொட்டியது. பிறகு போர்வையை எடுத்து உடம்பைத் துடைத்துவிட்டு இருவரும் அதே படுக்கையில் படுத்துக்கொண்டோம்.

இருவரும் கட்டைகளைப்போல் பிரக்ஞையற்றுத் தூங்கினோம். மறுநாள் மணிலாலுக்கு ஜுரம் இறங்கிவிட்டது. 40 நாள்வரையில் ஜலத்தில் கலந்த பாலையும் ஆரஞ்சுப் பழரசத்தையும் கொடுத்துவந்தேன். எனக்குப் பயம் நீங்கிவிட்டது. கடினமான வியாதியும் கட்டுக்குள்ளாகிவிட்டது.

இப்பொழுது மணிலால் மற்றக்குழந்தைகளைவிடத் திடமாக இருக்கிறான். அவன் ஆண்டவன் கருணையால் பிழைத்தானோ, ஜல சிகிச்சையால் பிழைத்தானோ, அல்லது ஆகாரக்கிரமத்தில் ஜாக்கிரதையாக இருந்து சரியாக சிசுருஷை செய்ததால் பிழைத்தானோ வென்று யார்தான் சொல்ல முடியும்? ஆண்டவன் தான் அவனைக் காப்பாற்றினானென்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த எண்ணம் இன்னும் மாறாமலே இருந்து வருகிறது.

---

## பஞ்சமா பாதகங்கள்.

(நவமணி எழுதுவது.)

பஞ்சமா பாதகங்களென்றால் ஐந்து கைத்துரோகங்கள். அவையாதெனில், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை, பொய்யேயாம். இவ்வைவகைத் துரோகங்களை ஒருவன் துறந்தாலன்றி அவனை மானிடப்பிறவியென்று சொல்லலாகாது. களவு என்றால் ஒரு பொருளை மற்றையர்க்கு மறைவாக எடுத்துக்கொள்ளுதல் மட்டுமல்ல பிறரோருடைய பொருட்களை வஞ்சித்துக்கொள்ள சிந்திப்பதே ஓர் களவாகும். முத்திநிலையடைய விரும்புவோன் தன்மனதில் களவைப்பற்றி யாதொன்றும் நினையாமலிருப்பானாக. நினைத்தலும் செய்தற்குச் சமானமே. நாம் ஓர் பொருளை திருடி வைத்திருப்பின் அப்பொருள் விருத்தியாகச் சிறிதுக்குப் பலுகும் அல்லது மேன்மைபெற்றோங்கும், ஆனால் அப்பொருள் எவ்வளவு சடுதியில் மேன்மை பெற்றோங்குமோ அவ்வளவு சீக்கிரமாக அழிந்து அழிந்துபோம்.

"களவினாலாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்." (குறள்)

களவு அழுகைக்கெடுக்கும். பிறருடைய பொருட்களைத் திருடுகையில் மிக்கச் சந்தோஷம் பிறக்கும். ஆனால் அக்களவினாலாகும் பயனோ மிகவும் கசப்பாகவிருக்கும். களவை அணிகலமாகப் பூண்டோர்கள் சத்தியவழியில் தமோத்தமுற்றும், அன்பெனும் ஆசாவு கோலை முறித்தும், துன்பமென்னும் துணை துணைகொள்வார்கள். களவு செய்ய வேண்டுமென்று அற்பர்களுடைய சிந்தையில் தோன்றுமேயொழிய பெரியோர்களுடைய மனதில் தோன்றா. எவரெவர் களவு செய்கின்றார்களோ அவர்கள் துற்பலனை அனுபவிப்பார்கள். இதையிட்டே திருவேசபெருமானும் களவு செய்யாதிருப்பாயாக என்று உலகத்திற்கு ஒரு கற்பனை கொடுத்துள்ளார்.

இரண்டாவது துரோகமென்னவெனில், கள்ளுண்டல். அதாவது மது வுண்ணல். கள்குடியாமையே சாலச் சிறப்பாகும். பெரியோரால் மதிக்கப்படாதவர்களே குடியில் காலூன்றுவார்கள். கலவிதுர்க்குணச் செய்கைகளுக்கும் மதுவே குருவாகும். நம் தமிழ் மொழியிலும் கள்ளுண்டல் மிகவும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ உயர்குடியிற் பிறந்த ஆடவர்களும் விளையாட்டாக முதலில் மதுவைப்பருகி பின்னர் முழுக்குடியின் மூழ்கிவெறிகொண்டிருப்பதை நம் கண் குளிரப்பார்க்கின்றோம். சிலர் நம் நாட்டில் கள்ளைப்பருகிவிட்டு தெருக்களிலும் சந்துகளிலும் நாணமின்றி துணிகளில்லாமலும் மெய்மறந்தும் அலைகின்றார்கள். பாருங்கள் இந்தியதேயத்தின் கதியை! அற்பபோகத்தை எண்ணி கள்ளைப் பருகினோர் நஞ்சை யுட்கொண்டவர்களுக்குச் சமானமாவார்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல வெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்." (குறள்)

கள்ளுண்போன் சொல்கிறகாரியத்தின் பயன் துன்பத்தைக்கொடுக்கக்கூடியதாகும். "கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்று" என்பது இன்னொரு நீதி. ஏனையநாடுகளை விட நம் நாடானது பொதுவாகக் குறைந்த வருமானத்தை யுடையதாயிருந்தாலும் நம் இந்திய நாட்டிலும் குடியென்னும் மேடு உயர்ந்துகொண்டே வருகிறது. எல்லா மதத்தாராலும் வெறுக்கப்படும் இக்கொடிய தொழிலை நம்மவர்களிலநேகர் இன்னும் ஆதரித்தே வருகின்றனர். நம் நாட்டினர் அறிவின்மையால் கள்ளைப் பருகி வருகிறபடியினால் பலவாறாலும் இழப்படைகிறார்கள். எவனொருவன் கள்ளைப் பருகினானோ அவன் உடனே அக்கள்ளின் வலிமையால் தன் உள்ளத்திலுள்ளவைகளையும் மறையாது கூறிவிடுகிறான். மது உபயோகிப்பவர்களுடைய இரத்தாசயம் மதுவின் சக்தியினால் வியாதியால் பீடிக்கப்படுகிறது. வயோதிகத்தில் பல வியாதிகளை வரவேற்கிறது. அப்பேர்ப்பட்ட தொழிலை அற்பமாயெண்ணுது பெரும் பாதகமென்றெண்ணுவோமாக.

மூன்றாவது துரோகமென்னவென்றால். குருநிந்தையாம். இந்தியாவில் பூர்வீக காலங்களில் சத்தியமும், சாதுர்யமும், வித்வ விவேகமுமுடைய பல குருக்களிருந்தார்கள். இக்காலத்தில் அப்படியில்லை யென்றும் நாம் குருக்களையும் குரவர்களையும் அற்பமாக எண்ணக்கூடாது. அன்னவர்களிடத்தில் நம்மேல் நம்பிக்கை யுண்டாகும்படி செய்தலே மிகவும் இனிதாகும். அவர்களிடத்தில் நாம் பயபக்தியாய் தொண்டுசெய்து அவர்களுடைய சொற்களை நற்போதனைகளாகக் கூடியதாகக்கொள்ளல் வேண்டும். இதை விட்டே பட்டினத்துப் பிள்ளையார் தம் பாடலிலே மனித சென்ம மெடுத்தவினால் உண்டாகும் ஊதியமென்னவென்றால், ஆசிரியரது கட்டளைக்கும் மற்றுமெவைக்கும் கட்டுப்படுதலே வென்றும், ஓர்வன் ஆசிரியர் சொன்னபடி நடவானாகில் அவன் இவ்வுலகத்தில் இருக்கிறதென்ன, இறக்கிறதென்ன என்றும் கூறுகிறார். (வரும்)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ வைகாசி மீ ௩௳

## மாயூர மகாநாடுகள்.

தஞ்சை ஜில்லா மாயூர மகாநகரில் கூடிய மும் மகாநாடுகளில் முதலிய மகாநாடாகிய பிராமணரல்லாதார் பெரு மகாநாட்டின் தலைவர் உயர் திருவாளர் திவான்பகதூர் திருவேங்கட நாயகருடைய சொற்பொழிவைப் பற்றி முந்தின வாரத்திலெழுதியிருந்ததை நேயர்கள் கவனித்திருக்கலாம்.

வரவேற்புக்கழகத் தலைவர் திரு. ஆர். சின்னையா பிள்ளையவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் தலைவரைப் பார்க்கிலும் ஒருபடி முந்திவிட்டாரென்றே சொல்ல வேண்டும். மகாத்மா காந்தி நிர்மாணத் திட்டங்களிலேயே அவருடைய மனோராஜ்யம் செங்கோலோச்சுகிறதென்று நன்கு தெரியவருகிறது. 'நமதுகடமை' என்று பேசியிருக்குமிடத்தில் நமது கட்சியில் பெரும்பாலார் கதர் கட்டுகின்றார்கள்; கதர் கட்டாத சில தலைவர்களும், பிரதிநிதிகளும் இன்று முதல் கதர் கட்டுவதாகத் தங்களுக்குள் தாங்களே தீர்மானஞ் செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்கள். தலைவர்களும், பிரதிநிதிகளும், ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சொல்லியது மிகப்பொருத்தமானதென்று நயப்புக் கொண்டிருப்பார்களென்பதற்கு கனம் பனகால் அரசர் மகாத்மாகாந்தி படத்தைத் திறந்து வைத்ததே போதிய சான்றாயிருக்கவேண்டும்.

நாட்டுப் பலம் பெறுவதற்காக மகாத்மாவை பொம்மைபோல சென்னைத் தெருக்கள் தோறும் தூக்கித் திரிந்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரைப்போல் மகாத்மா பேரை வெளிக்குச் சொல்லிக் கொண்டு உள்ளுணர்விலாதிருத்தல் பெரிய ஏமாற்றமாக முடியும். அதற்காகத்தான் திருவாளர் சின்னையா பிள்ளையவர்கள் முடிவுரையில்,

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று பொய்யாமொழியார் புகன்ற செய்யுளை மேற்கோள் காட்டிச் சொல்லுவதைச் செய்கையிற் காட்ட வேண்டுமென்றும், பொருளைச் செலவு செய்து அருமையான கூட்டங்களைக் கூட்டிவிட்டு அதனால் யாதொரு பயனும் அடையாமற்போவது விரும்பத்தக்கதல்லவென்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

மகாநாட்டுத் தீர்மானங்கள் பலவற்றிலும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் கொண்டு வந்த தீர்மானமே மிகவும் பொருத்தமுடையது. தமிழ் நாட்டில் அவருடைய தீர்மானம் எப்பொழுது அமுலுக்கு வருமோ; பிராமணரல்லாதாராவது எப்போது அதைத் தாரகமாக ஒப்புக் கொள்ளுகின்றார்களோ அப்போதே சுயராஜ்ய வழி திறக்கப்பட்டுவிடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் தமிழ் நாட்டில் அத்தீர்மானத்தைப் பற்றி இனியென்ன செய்கிறார்களென்று பார்ப்போம். நாட்டில் பிராமணீயம் தொலைய வேண்டுமானால் பிராமணரல்லாதாருக்குள்ளிருக்கும் சமூக வேற்றுமைகள் முதலாவது தொலைய வேண்டுமென்று பன்முறை பகர்ந்திருக்கின்றோம். மாயூர மகாநாட்டுத் தீர்மானங்களும் வாய் வேதாந்தமாக மாறிவிடாமல் உண்மை விளக்கச் செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு தலைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம். தற்கால மந்திரிகள் என்ன செய்கிறார்களென்று கேட்டுக் கொண்டிருந்தால் முற்கால மந்திரிகள் என்ன செய்தார்கள் என்று சொல்லிக் கொண்டேதானிருப்பார்கள். ஆகையால் தேசத்துக்குத் தேவை யெதுவென்பதைத் தலைவர்கள் கவனிப்பார்களாக.

இளைஞர் மகாநாட்டுத் தலைவர், வரவேற்புத் தலைவர் திருவாளர்களான கண்ணப்பர், கனகசபை நாடார் இவர்களின் சொற்பொழிவுகள் பொன்னேபோல் போற்றத்தக்கன. எதிர்கால வாழ்க்கைக்குப் பெருஞ் சாதனமாக வரப்போகிற இளைஞர் மகாநாட்டுத் தீர்மானங்கள் மிக விசேஷம் பொலிந்து விளங்குகின்றன. பெரியோர்கள் செய்யும் தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதற்கு நமது நாடெங்கும் இதுபோன்ற இளைஞர்கள் கூட்டம் இடைவிடாமற்கூட வேண்டியது வெகு முக்கியமானது. கிராம நிர்மாணத் திட்டங்கள் பலவும் அவர்களால் நிறைவேற்றக் கூடும். நாம் ஒவ்வொருவரும் சுயராஜ்யத்துக்குத் தகுதியுடையவர்களாக வேண்டுமானால் சாக்கடை வேலை முதல் தானே செய்யக் கற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று அன்னி பெஸண்டு கூறியதற்கேற்ப நம் இளைஞர்கள் நமது சமூகமத்தியில் சர்வ ஊழியமும் தானே செய்யத் திறமையுடையவர்களாவதற்கு தமிழ் நாடெங்கும் இளைஞர் சபைகள் ஏற்பட வேண்டும்; தலைவர்களும் அவர்களுக்குத் தாராளமாக வேண்டிய உதவிகளும் செய்ய வேண்டும்.

சமரச சன்மார்க்க மகாநாட்டுத் தலைவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களின் அரும் பெரும் வாக்கியத்தின் சாராம்சங்களைப் பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். திருவாளர் முதலியார் வாக்கை நோக்கும் எக்கொள்கையுடையோரும் அவ்வழியே செவ்வழி யென்று தீர்மானிக்கவுங் கூடும். சமரச சன்மார்க்கத்திற்குப் பொருள் கூறுமிடத்தும் வாழ்வைப் பற்றிக் கூறிய விடத்தும் மக்கள் மனதை ஈர்க்கவல்லதும் சொற்கள் அதிரசமுள்ளவைகளாகவே அமைந்துமிருக்கின்றன. இயற்கைக்கு மாறாக புறத் தோற்றங்களைக் கண்டு மயங்கும் செயற்கை வாழ்வின் தீமையைச் செவ்வனே விளக்கியிருப்பதை மக்கள் மிக்கக் கவனிக்கத்தக்கது.

பண்டைக் காலத்தில் நம் நாட்டினர் செந்நெறியில் விளங்கும் இயற்கை வாழ்வை நடாத்தி வந்து நாடு செழிப்புற்றிருந்ததைப்பற்றியும், பின்னர் மக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வு புகுந்து பிரிவுகளினால் பாரத நாடு மிகவும் பரிதவிக்க நேரிட்டதையும், நம் நாட்டின் அதிகாரத்திற் புகுந்த சதிகாரப் பார்ப்பனர்கள், அறநெறியும், அன்பும் ததும்பி யொழுகிய புத்தர் மதத்தை புத்த சந்நியாசிகளைப் புதைத்து மறைத்து விட்ட கொடுமையையும், பெண்களும், தொழிலாளர்களும் அன்னடிமைகளாயிருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மனுதர்ம அநீதிகளையும் இயற்கையாயுள்ள சன்மார்க்கத்தைக் கொன்று சாதி மார்க்கமாகிய பார்ப்பன மார்க்கத்தைப் பரப்பியதால் நாடு கேடுண்டதென்பதையும் சரியானபடி விளக்கிவிட்ட திரு. முதலியாருக்கு நன்றி கூற நம் நாடு கடமைப்பட்டிருக்கிறதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா!

பிராமணர்கள் மற்றவர்களைச் சிறுமைப் படுத்தியதுபோல மற்றவர்களும் ஒடுக்கப்பட்டவர்களைச் சிறுமைப் படுத்துகிறார்களென்பதை உள்ளவாறு சொல்லி, அத்தோஷ நிவாரணத்திற்கு யாவரும் ஆண்டவனை நோக்கி மன்னிப்புக் கேட்க வேண்டுமென்ற வாக்கியங்கள் மக்கள் மனதைக் கவராமற் போகாது.

பெண்ணுலகத்தைப் பிரித்து வாழாமல் பெண்ணும், ஆணும் ஒருப்பட்ட வாழ்வே ஒத்த வாழ்வென்றிசைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவதும், உயர்வு தாழ்வு கருதி எவரையும் குருவாகக் கொள்வதும் கூடா வொழுக்கமென்று கூறியது சாலவும் நன்றென்பதை யாவரும் கடைப்பிடிப்பார்களாக.

தீண்டாமை விலக்கைப்பற்றி ஸ்ரீமான் முதலியார் மனமுருகி வழுத்திய அருள் மொழிகளனைத்தையும் முழுமனதுடன் ஆதரிக்கின்றோம். தீண்டாமையில் பிராமணரினும் பிடிவாதமாகப் பிராமணரல்லாதாரிலு முண்டென்று அவர் கூறுவதை ஒருவரும் மறுக்க முடியாது. அக்குற்றத்தைப் பிராமணரல்லாதார் நிவர்த்திக்க மார்க்கந்தேடவும் வேண்டும். காந்தியடிகளைப் பூஜிக்கவும், அவர் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கவும், அவருக்குத் திருவிழா நடத்தவும் ஒருப்படும் எவரேனும் மகாத்மாவின் தீண்டாமை விலக்கல் எனும் புத்திமதியைக் கேட்பாரில்லையென்பதை விளக்கியிருப்பதும் உண்மையேயாம். தேசநலத்தை விரும்புவோர் யாராயினும் தேச நலத்திற்கு மாறுபட்ட தீமைகளை மாற்ற வேண்டுமென்று சொல்லும் யோசனையை ஏன் மறுக்க வேண்டும்?

பொதுவாக மாயூரத்தில் கூடிய மூன்று மகாநாடுகளும் மகாநாட்டின் தலைமைப் பேருரைகளும், தீர்மானங்களும் தமிழ் நாட்டை சற்றே விழிப்படையச் செய்துவிட்டதென்றாலும், தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வருவதைப் பொறுத்திருக்கிறது. இளைஞர்களை கிராம வேலைகளுக்கு உபயோகமாகத் தலைவர்கள் தீர்மானங்களைச் சீர்தூக்கிப் பார்த்து செயலில் நடத்திவைப்பார்களென்று நம்புகிறோம். சமூகச் சீர்திருத்தத்திற்கு வழி காட்டியாகவும், தமிழ் நாட்டின் தலைப்பயனாகவும் தோன்றிய ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் மும்மகாநாடுகளின் தீர்மானங்களும் இனி அனுஷ்டானத்திற்கு வர ஹேதுகரமான வேலைகளைத் துணிவுடன் செய்ய இளைஞர்களைத் தட்டி எழுப்பும்படி வேண்டுகின்றோம்.

---

## நாடார்குலமித்திரன் லாட்டரிச் சீட்டு அறிக்கை.

[ பிரைஸ் எடுக்கும் வைபவத்தன்று கூடிய கூட்டத்தில் கனம் ச. கு. சருக்கரைப்பாண்டியர் செய்த ஆரம்பப் பிரசங்கம். ]

கனவான்களே!

இப்போது இங்கு கூடியிருக்கிற பெரியோர்கள் முன்னிலையில் பிரைஸ் எடுக்கப்போகிற நாடார் குல மித்திரன்கேஸ்நிதி தருமப்பண்டு லாட்டரிச் சீட்டுக்கு, சீட்டுகள் 33000 விற்பனை செய்து மொத்தம் பிரைஸுக்கு ரூ 17500 கொடுப்பதாகவும் குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் முதலிய செலவுகளுக்கு ரூ 1800 மதிப்பிட்டும் போட்டிருக்கிறது.

33000 சீட்டுக்கு 1500 புஸ்தகங்கள் தான் அச்சிடவேண்டியது. அதற்கு 7500 புஸ்தகங்கள் அச்சிட்டு தமிழ்மணிகளுக்கெல்லாம் அனுப்பப்பெற்றிருக்கின்றன. அதனால் தபால் ஸ்டாம்பு, குமஸ்தா சம்பளம் சிலோன் சென்னை முதலிய பலவிடங்களின் பிரயாணச் செலவும் ஆங்காங்கு சீட்டுவிற்பனை செய்த அன்பர்களின் செலவும் மற்றுமுள்ள செலவுகளுமாக ரூ 3000 க்கு மேல் ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட 33000 சீட்டுகள் விற்பனையாகாமல் 20000 செல்வாணம் சீட்டுகள் மட்டுமே விற்பனையாகியிருக்கின்றன. அப்படியானாலும் பொதுஜனங்களுடைய நன்மையைக் கருதி பண்டுத் தொகையில் ரூ 1200 பொறுப்பாகவும் சரியென்று ரூ 1800 மட்டும் செலவு போட்டுக்கொண்டு ஈவுப்படி பிரைஸ் ரூ 9700 கொடுக்க வேண்டியதற்கு ரூ 40 செல்வாணம் அதிகப்படுத்தி ரூ 9740 செல்வானமாக பிரைஸ்கள் ஏற்படுத்தியிருக்கிறது.

1-வது பிரைஸ் ரூ 1600, 2-வது பிரைஸ் 800, 3-வது பிரைஸ் ரூ500, 4-வது பிரைஸ் ரூ 250, 5, 6, 7-வது பிரைஸ் ரூ 100 வீதமும் மற்றும் இல்லறைப் பிரைஸ்களும் ஏற்படுத்தியிருக்கிறது. இதில் எடுத்துக்கொண்ட பிரமாணத்தின் தக்கபடியும் 20000 சீட்டுகளுக்குள்ள ஈவுப்படி பண்டுத் தொகையில்லாமல் குறைந்த தொகையாக பண்டுக்கு சுமார் ரூ 4100 வரைதான் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

அப்படியானாலும் தற்கால நிலைமையில் இங்குள்ள கனவான்களாலும் சிலோன், பினாங்கு சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, பர்மா முதலிய அயல் பரதேசங்களிலுள்ள தமிழ்மணிகளின் ஆதரவினாலும் மற்றுமுள்ள தமிழ்மணிகளின் முயற்சியினாலும், குடியரசு, நவசக்தி பத்திராதிபர்களின் ஒத்தாசையினாலும், அவர்களின் பத்திரிகை சந்தாதாரர்களாலும், நாடார் மஹாஜன சங்கம் காரியதரிசிகளாலும், நாடார் ஊழியப் பிரசாரகர்களாலும், பாலிய, வாலிப நாடார் சங்கங்களின் அங்கத்தினர்களாலும், மற்றும் அனேகர்களுடைய ஒத்துழைப்பினாலும் 20000 செல்வாணம் சீட்டுகள் சேர்ந்து இத்தனை பெரியோர்களும் விஜயம் செய்து விமரிசையுடன் பிரைஸ் எடுக்க நேர்ந்ததுபற்றி மிகவும் சந்தோஷத்துடன் எல்லோருக்கும் எங்கள் அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

### ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள் புரிந்த அக்கிராசனப் பிரசங்கம்.

மேற்கண்ட லாட்டரியில் சீட்டு ஒன்றுக்கு ரூ 1-0-0 வீதம் சீட்டுகள் 33000 விற்பனைசெய்து அதற்கு ரூ 33000-க்கு சீட்டுக் கமிஷன் ரூ 3000-ம் குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி விசேஷக் கமிஷன் ரூ 1800-ம் தனிப் பிரைஸ் ரூ 1700-ம் (1-வது பிரைஸ் ரூ 3000-ம் 2-வது பிரைஸ் ரூ 1500-ம் 3-வது பிரைஸ் ரூ 1000-ம் 4-வது பிரைஸ் ரூ 500-ம் 5, 6-வது பிரைஸ்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# ஏழைகளைப் பெருக்கும் டாம்பீகங்கள்.

## பணக்காரர்கட்குச் சலுகை.

### தேவைக்கதிகம் எப்போது மபாயம்.

புதிய டில்லியையும், இந்தியா சட்டசபை மண்டபத்தையும் சென்ற மாதத்தில் முதன் முதலாகப் பார்த்த ஒரு மாது மகாத்மாகாந்திக்கு எழுதியதும் அதற்குமகாத்மாவின் பதிலும்:—

"ஒரு முக்கிய விஷயத்தை உங்களுடைய அறிவிப்புக்குக் கொண்டுவர விரும்புகிறேன். நான் முதன் முதலாக, சென்ற மாதத்தில், இந்தியா சட்டசபைக்கூட்டத்திற்குப் போயிருந்தேன். புதிய டில்லிக்கு நான் போனதும் அதுதான் முதல் தடவை. புதியடில்லி பார்வைக்குச் சோபிதமாக இருக்கும்படி செய்ய எத்தனை கோடியை அதில் கொட்டியிருக்க வேண்டுமென்று அப்பொழுதுதான் எனக்குப் புலப்பட்டது. இந்தியா சட்டசபை மண்டபமும் அதிக சோபிதமாக இருந்தது. ஆனால் அதைவிட்டு வெளியே வந்ததும், அந்த இடத்தை சிருஷ்டி செய்த தொழிலாளர் தங்கியிருந்த குடிசைகளைப் பார்த்தேன். அவைகள் இடிந்து விழுந்தும், அலங்கோலமாயும் இருந்தன. அதைப்பார்த்ததும் எனக்கு மிகுந்த துக்கமேற்பட்டதால், அவைகளுக்குள் சென்று பார்த்தேன். அவை மனிதருடைய வாசத்திற்கேற்றவைகளாக இருக்கவில்லை. பகல் முழுவதும் வேலைசெய்து களைத்துப்போன தொழிலாளர்கள் அந்தக் களைப்பைப் போக்கிக்கொள்ள அந்த இடங்களுக்குத் தான் இராத்திரி வேளையில் வரவேண்டும். சில இடங்களில் மண், சுண்ணாம்பு இவைகள் இல்லாமலே சுவர் எழுப்பப்பட்டிருந்தது; கற்களை வரிசையாக அடுக்கி வைத்திருந்தார்கள். பணக்காரர்கள் வசிப்பதற்காகக் கட்டியிருந்தகட்டடங்களுக்கும் அந்தக் கட்டடங்களை நிர்மாணித்தவர்களுக்காக ஏற்படுத்தியிருந்த குடிசைகளுக்கும் இருந்த வித்தியாசம் சகித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. தொழிலாளிகளான ஸ்திரீகள் இதைப்பற்றிச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. சாயங்கால வேளையில் அவர்கள் திரும்பி வந்துகொண்டிருக்கையில், பாடிக்கொண்டு போனார்கள். ஆனால் என்னுடைய ஆத்மா துடித்துக்கொண்டிருந்தது. தொழிலாளர்களை இவ்வளவு கேவலமான ஸ்திதியில் கவர்ன்மெண்டார் விட்டு வைத்திருக்கையில் பணக்காரர்களுக்காக கோடிக்கணக்காகச் செலவிடுவது எவ்விதத்தில் நியாயமாகும்? சில நிமிஷங்களுக்குள் என் கண்ணில்பட்ட இந்த கோரக்காட்சியானது இந்தியா சட்டசபை அங்கத்தினருடைய கண்களிலிருந்து எவ்விதம் தப்பியிருக்க முடியும்? அவர்கள் பல பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள்; பல தீர்மானங்களைக் கொண்டுவந்தார்கள்; இந்த வாயில்லாப்பூச்சிகளுக்காக அவர்கள் ஒருவார்த்தை பரிந்து பேசக்கூடாதா? இந்தப் பாழுங்குடிசைகளில் தொழிலாளிகள் மாரிகாலத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்களென்று அவர்கள் யோசித்துப்பார்த்திருக்கக்கூடாதா? நான் ஒருவரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. நீங்களாவது ஏதேனும் செய்யக்கூடாதா? நான் ஒருவரிடத்திலும் என்னுடைய செல்வாக்கை உபயோகிக்க இஷ்டப்படாததால் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். ஆனால் நீங்கள் ஏதேனும் செய்யலாம். நீங்கள் ஏழை நண்பர். ஏதேனும் நீங்கள் செய்யலாம்.

#### பதில்.

ஹிந்தி பாஷையில் இந்த ஸ்திரீ எழுதியிருந்த கடிதத்தின் முக்கிய வார்த்தை மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இந்தகவின காலத்தில் இவ்வித வித்தியாஸம் பாராட்டப்படுவது அதிசயமன்று. இந்த நண்பர் கண்டுபிடித்த விஷயமானது ஆதிகாலத்தில் கௌதம புத்தர் கண்டுபிடித்த விஷயத்தை ஞாபகப்படுத்துகிறது. அவர் கண்டதும் புதிய விஷயமன்று. ஆனால் விருத்தர்களையும், பிணியாளர்களையும், இதர துன்பங்களையும் அவர் நேரில் கண்டது அவரைத் திடுக்கிடச் செய்துவிட்டன. உலகின் அதிருஷ்டமே அதனால் மாறுதலடைந்தது. இந்த ஸ்திரீயும் முதன்முதலாக இப்பொழுதேனும் திடுக்கிட்டுப்போனது விசேஷம்தான். அவரும், ஏனைய ஸ்திரீகளும் ஏழைகள் விஷயத்தில் கருணை காட்டினால் அவர்களுடைய நிலைமை வெகுவாக உயரும். இந்தியாவில் காணும் ஒவ்வொரு அரண்மனையும் செல்வத்திற்கு ருஜுவன்று; அதிகாரமதத்தையும், சிலரிடம் செல்வம் தேங்கிக் கிடப்பதையுமே அது மெய்ப்பிக்கிறது. நமது கவர்ன்மெண்டும் ஏழை ஜனங்களைக் கசக்கிப் பிழிந்து கொழுப்பதாக இருக்கிறது.

இந்தியாவில் 1500 ரூபாய் மாதச் சம்பளம் காலக்ஷேபத்திற்குப் போதாதென்றும், அதற்குமேல் சம்பளம் கிடைக்கவழியில்லாதவர்கள் அங்கு செல்லக்கூடாதென்றும் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்ததைச் சில தினங்கள் முன் ஒரு நண்பர் எனக்கு வெட்டி அனுப்பினார். அதைக்கண்டு சண்டையிடுவதில் பிரயோஜனமில்லை. அதை எழுதியவருடைய தோற்றத்திற்கு அத்தொகை போதாததாக இருக்கலாம். வெள்ளைக்காரர்கள் கிளப்புக்குப் போக வேண்டியிருக்கிறது; மோட்டார் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; கோடைகாலத்தில் மலைக்குப்போக வேண்டியிருக்கிறது; குழந்தைகளை இங்கிலாந்தில் படிக்கவைக்க வேண்டியிருக்கிறது. இதற்குக் குறைந்து சரிப்படாதென்று அவர்கள் சொன்னால் அவ்வளவு கொடுக்க நமக்குக் கட்டாதென்றுதான் நாம் சொல்லலாம். வெள்ளைக்காரர்களுடைய சேவை எவ்வளவு ஹிதத்தைத் தருவதாக இருந்தாலும், ஏழை இந்தியர்கள் பிழைத்திருக்க வேண்டுமானால் அவர்களை வைத்துக்கொள்ள சாத்தியப்படாது. இந்தியாவில் வசிக்கும் கோடிக்கணக்கான இந்தியர்கள் வருஷத்தில் 6 மாத காலம் மலையில் வசித்தால், அவர்களுடையஆயுள் காலம் இரட்டிக்குமென்று ருஜு செய்யலாம். ஆனால் அவர்களே அதை ஒப்புக்கொள்ளுவார்களா?

ஆயிரக்கணக்கான ஜனங்களுடைய சுகவாழ்வை தினம் அரித்துக்கொண்டிருக்கும் ஒரு அற்ப சின்னத்தைத்தான் இந்த ஸ்திரீ பார்த்திருக்கிறார். யாரேனும்ஒரு அங்கத்தினர் தொழிலாளிகளுக்கு நல்ல விடுதிகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தால் அது நிறைவேறும். கவர்ன்மெண்டாரும் அதைக் கவிழ்த்துவிடமாட்டார்கள். அதை அனுஷ்டானத்திலும் அவர்கள் நிறைவேற்றிவைப்பார்கள். ஆனால் அந்தச் செலவு மற்ற ஏழைகளின் தலையில் விடியும். இவ்வித நிலைமை ஏற்படவேண்டுமென இந்த நண்பர் விரும்புவாரென்று நான் நினைக்கவில்லை. தலைகனத்த ஆட்சிமுறையை மாற்றவேண்டுமென்றுதான் மற்றவர்களைப்போல் இவரும் அபிப்பிராயப்படுகிறார். அதற்கு நான் எத்தனையோ தடவை வழியைக் காட்டியிருக்கிறேன். வேறு வழி எனக்குத் தெரியவில்லை.

## துணுக்குகள்.

சிங்கப்பூரில் இந்துக்களின் மயானம் தற்போது டவுனிலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் ஏற்பட்டிருப்பதால் பிரேதங்களைத் தூக்கிச் செல்வதற்குக் கஷ்டமாயிருப்பதாலும், மோட்டார் எமன்கள் கால்நடைப் பிரயாணிக்கு வீதிகளில் இன்னல் விளைப்பதாலும் இந்துக்களால் ஒரு அழகான நான்கு சக்கர விமானம் செய்யப்பட்டு இரண்டு குதிரை பூட்டிப் பிரேதங்களை எடுத்துச் செல்லுகிறார்கள். விமானமும் இந்துக்களின் ஆசாரப்படி அழகாக அமைக்கப் பட்டுள்ளது.

* *

மலாய் நாட்டில் கலப்பு விவாகம் பெரும்பாலும் நடத்தப்படுகின்றது. விவாகமுகூர்த்தப் பத்திரிகைகள் செட்டியார்-மகனுக்கும், கோனார்-மகளுக்கும், தேவர்-மகனுக்கும், பிள்ளை-மகளுக்கும், பத்தர்-மகனுக்கும், படையாச்சி-மகளுக்கும் விவாக முகூர்த்தம் நடைபெறுமென வெளியாகின்றன.

* *

இலங்கை மாகாளியென்ற காளி கோயில் இருந்த காரணத்தினாலே கொழும்பை அடுத்த காலி நகரத்துக்கு அப்பெயர் ஏற்பட்டதாம்.

* *

இலங்கையில் ஒரு காலத்தில் பலாம் பழமும், பனாட்டும், கிழங்குகளும் பஞ்சத்தாங்கியாயிருந்தன. இப்பொழுது மரவள்ளிக் கிழங்கு பஞ்சத் தாங்கியாயிருக்கிறது.

* *

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலுக்கு டை கோயில் தரும கர்த்தாவும மானேஜரும் ஆகிய ஸ்ரீமான் இரகுநாத மாப்பாண முதலியாரவர்களால் ஓர் புதிய அசையாமணி 2000 ராத்தல் நிறையுள்ளதாகக் கிளாஸ்கோ நகரத்தில் செய்விக்கப்பட்டு வந்திருக்கிறது.

* *

ஒரு பட்டுப் பூச்சியின் கண்ணில் ஐம்பதினாயிரம் நரம்புகளும் ஐயாயிரம் திருஷ்டிக் கருவிகளு மிருக்கின்றனவாம்.

* *

பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பிரஞ்சுக் காரர் ஆட்சிக்குட்பட்ட ஹேரவெனனும் தீவில் போதுமான எலிகளைக் கொடுத்து எலிகளுக்குப் பதிலாகப் பெண்பிள்ளைகளை மனைவியாக்கிக் கொள்ளலாம்.


**B. Abdul Karim Sahib,**

**Kareemiya Unani Medical Store,**

**Cuddalore, O. T.,** (South India)

அருமை துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத்திடத்தையும், அதிஅற்புத ஆச்சரியமான இன்பசுகசக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்து கொள்ளலாம். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும், தங்க மெடலும பரிசுபெற்ற

ஜவாஹீர் முபற்ரு என்னும்

**மதன மோஹன ஊர்க்குருவி**

**கிருத லேகியம்.**

அசல் பாகம்! அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்த கம்பெனியார்களும் செய்து காட்டும்பக்ஷத்தில் அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூ 500 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அநுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்த்த இந்த அசல் "முபற்ரு" வேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே தாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவின்ப நலங்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இத்திரலோகத்திய "காமசஞ்சீவினி" இதுதானோ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே பின்னர் மோகக்கன்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிதக் காரணங்களினாலும் தேஹத்திற்குச் சத்காரணமாகிய நாத விந்துவின் விரயஞ் செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில வீரிய விர்த்தி குறைந்து உலகின்பசக்தியை இழந்து ஆண் தன்மையற்ற வயோதிகர் போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும் எலும்புருக்கி டிவட்டைச் சூட்டினாலும் ஜீவரத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து துர்தஸ்கலிதமுடையோரும், நித்திராபங்கமென்னும் சொர்ப்பனஸ்கலிதத்தால்நாளும்வாதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களுமசுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமுங் குறைந்து, வியாபக சக்தி குறைவு, வைகாலசதி, தேக காங்கை, இடுப்புவலி, பசி மந்தம், மலச் சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்வ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய லாயர்கள், குமஸ்தாக்கள், பாடலீகர்களும் மற்றும் வியாபக சக்தியால் வேலையையுடைய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும் வியாபகவிருத்தி புதுமேனியையும் இரத்த விர்த்தி, வீரிய விர்த்தி, சந்தானவிர்த்திமுதலிய சர்வ நலங்களையும் பெறுவார்கள். சீக்கிரஸ்கலிதமுடையவர்களுக்கு இது ஓர் இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும்; குணம செய்வதில் இது மஹாவல்லமையும், பேரும் பிரக்கியாதியும் பெற்றது. இதனை பரீக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம் செய்யும் சத்தியமான சித்தானந்தயோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமைகுணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும். தன்னை பலப்படுத்திக்கொள்ள நாடும் போகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரீக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 10—0—0
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 5—0—0
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 3—0—0

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

**B. அப்துல் கரீம் சாயபு,**

கரீமியா யூனானி மெடிகல் ஸ்டோர்,

கூடலூர், O. T.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection